**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்</u>**

**முன்னிலை : திருமதி.எ.சுவேதா,** B.B.A., L.L.B (Hons)

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26-ஆம் நாள் வியாழக்கிழமை**

**<u>அசல் வழக்கு எண். 4/2015</u>**

**<u>CNR.NO.TNCD10-000013-2015</u>**

1. ஞான அம்பலவாணன்
2. மீனாட்சி
3. முரளி நாயுடு
4. அறிவழகன்
5. ரமணன்
6. பாலாஜி
7. வேல்முருகன்
8. சுகாசினி ... வாதிகள்

/எதிர்/

1. நடராசன் (died)
2. மகேஷ்
3. நடனம் பிள்ளை
4. சரவணகுமார்
5. ஜெய்கணேஷ்
6. ராஜராஜேஸ்வரி
7. உஷா
8. குஞ்சிதபாதம்
9. ஜானகிராமன்
10. ஸ்ரீதரன்

3 முதல் 10 நபர்களின் பவர் ஏஜென்ட், கேதார்நாதன்,

11. பாலாஜி

12. மீனாம்பாள்

13. மங்கையர்கரசி

14. ஜெயக்குமார்

15. குமார்

16.விஜயலெட்சுமி

17. ராஜலெட்சுமி

18. தேவசேனா

19. புகழேந்தி

20. சந்திரசேகரன்

21. வேலம்மாள்

22. சேதுராமன்

23. கேதர்நாதன்

24. சுவேத குமார்

25. அழகம்மை ....பிரதிவாதிகள்

*(Death of 1st defendant recorded and plaint amended as per order in IA.191/2024 dated 20.6.2024)*

இந்த வழக்கானது 11.3.2026 அன்று என் முன்னர் முடிவான விசாரணைக்காக வந்தபோது வாதிகள் தரப்பில் அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.டி.மகேஷ் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி இறந்தும், 2ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.அ.சம்மந்தம் அவர்கள் முன்னிலையாகியும் 8, 10 பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கிலிருந்து தள்ளுபடி செய்யப்பட்டும், மற்ற பிரதிவாதிகள் நீதிமன்ற வருகையின்மையால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், இரு தரப்பும் கேட்கப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரீசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ...

## <u>தீர்ப்புரை</u>

தாவா சொத்தினைப் பொறுத்து, 1,2 பிரதிவாதிகளால், 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜெண்ட்டிற்கு எழுதிக் கொடுத்த 21.04.2011 - தேதிய கிரய

உடன்படிக்கை செல்லாது (VOID) என விளம்புகை செய்தும். தாவா சொத்துக்களைப் பொறுத்து மட்டும், 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜெண்ட் 11 முதல் 25 பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுத்த 5358/2011, 6478/2011, 6818/2011, 6817/2011, 7291/2011, 7499/2011, 303/2012. 1551/2012, 1552/2012, 1553/2012, 1544/2012. 2951/2012 ஆகிய ஆவணங்களும் செல்லாது (VOID) என விளம்புகை செய்து, அதன் தொடர் பரிகாரமாக, தாவா சொத்தில் வாதிகள் அனுபவத்தில், 3 முதல் 25 பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ அல்லது ஏஜெண்டுகளோ எவ்விதத்திலும் இடைஞ்சல் செய்யாதிருக்க வேண்டி. 3 முதல் 25 பிரதிவாதிகளுக்கெதிராக நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் வழங்கவும் மற்றும் இவ்வழக்கின் செலவுத்தொகைக்கும் வாதியால் இந்த வழக்கு முன்னிடப்பட்டுள்ளது.

2) **<u>வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம் :-</u>**

2.1 தாவாவில் கண்ட சொத்து வாதிகளுக்கும். 1, 2 பிரதிவாதிகளுக்கும், மற்றும் வேறு 22 நபர்களுக்கும் பொதுவில், பிரியாமல், பாத்தியப்பட்ட சொத்தாகும் என்றும் தாவாவில் கண்ட சொத்தும், அதன் கீழ்புறம் மற்றும் தென்புற சொத்தும், ஆக 27,050 சதுரடி சொத்து ஆதியில், 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும் தாவா சொத்தும், அதன் கீழ்புறம் மற்றும் தென்புற சொத்தினை, வாதிகள் உள்பட மேலும் 22 நபர்களுக்கும், 1. 2 பிரதிவாதிகளுக்கும் சேர்த்து, வீடு கட்டுவதற்கு பிரிபடாத மனைகளாக கிரயம் கொடுத்து விட்டார்கள் என்றும் அதனடிப்படையில், மேற்படி பிரிபடாத மனைகளில் வீடு கட்டுவதற்காக தாவாவில் கண்ட 3 முதல் 10 நபர்களின் பவர் ஏஜெண்டும் தாவாவில் கண்ட 23 -ம் பிரதிவாதியுமான கேதர்நாதன் என்பவரிடம், கட்டிடம் கட்ட வாதிகளும், 1, 2 பிரதிவாதிகளின் ஆலோசனையின் பேரில், இதர பிரிபடாத மனைகளை கிரயம் பெற்ற நபர்களும் 27,050 சதுரடியினை கட்டிடம் கட்ட ஒப்படைக்கப்பட்டது என்றும் அதன்படி மேற்படி கேதார்நாதன் 27,050 சதுர அடியில் FLAT கட்டி வாதிகளிடமும், இதர நபர்களிடமும், 1, 2 பிரதிவாதிகளிடமும் ஒப்படைத்துள்ளார்

என்றும் ஆனால், முழுமையாக பணி நிறைவேறாத நிலையில் ஒப்படைத்துள்ளார் என்றும் அதனைப் பொறுத்து, தனி நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் இந்நிலையில் வாதிகள் கிரயம் பெற்றுள்ள பிரிபடாத சொத்துக்களான 27.050 சதுரடியில், மேற்புறம், தென்புறத்தில் கீழ்மேல் ஜாதியடி 10. தென்வடல் 193 ஜாதியடி காலி மனையினைப் பொறுத்து, வாதிகளுக்கோ, அவர்களுக்குள் பிரிபடாத சொத்தில் கிரயம் பெற்ற இதர நபர்களுக்கோ தெரிவிக்காமலும், அனுமதி பெறாமலும், 1, 2 பிரதிவாதிகள், தாவாவில் 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜெண்டான கேதர்நாதனுக்கு 15.09.2011 ல் வழிநடை உரிமை கொடுத்து, ஒரு உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது என்றும் அவ்வாறு ஏற்பட்ட விபரம் வாதிகளுக்கு உடன் காலத்தில் தெரியவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

2.2 இந்நிலையில் மேற்படி 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜெண்ட் வாதிகளில் 1, 3, 4 நபர்கள் பேரிலும், மேலும் சில நபர்கள் பேரிலும், சிதம்பரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S 68/2014 என்ற நம்பரின் கீழ் வழக்கு தொடர்ந்து, அதில் இடைக்கால மனு கொடுத்து, அதுவும் I.A. 257 / 2014 என்ற நம்பரின் கீழ் இடைக்கால புழங்குரிமை பாத்தியம் கோரி மனு கொடுத்து. அதில் அறிவிப்பு கடந்த மே மாதம் வந்த போது தான் வாதிகளுக்கு தெரிய வந்தது என்றும் அதனடிப்படையில், வாதிகள், 1. 2 பிரதிவாதிகளை நேரில் சந்தித்து, மேற்படி வழிநடை ஒப்பந்தத்தைப் பற்றி கேட்ட போது, எவ்வித பதிலும் கூறாமல் இருந்ததால், அந்த வழக்கில் கட்சி தாக்கல் செய்து மேற்படி இடைக்கால மனுவினை தள்ளுபடி செய்யப்பட்டு விட்ட பிறகு, வாதிகளுக்கு மேற்படி 1. 2 பிரதிவாதிகள் மேற்படி பிரிபடாத சொத்தினை விற்ற பிறகு, தங்களுக்கென எவ்வித தனிப்பட்ட முறையில் எவ்வித உரிமையும் இல்லாத சொத்தினைப் பொறுத்து 1, 2 பிரதிவாதிகள், வழிநடை ஒப்பந்தம் எழுதிக் கொடுக்க உரிமையில்லை என்றும் அவ்வாறு எழுதிக் கொடுத்தது செல்லாது எனக் கூறி வழக்கறிஞர் மூலம் அந்த 31.10.2014 ல் அறிவிப்பு அனுப்பியதற்கு அந்த அறிவிப்பினை பெற்றுக் கொண்டு, பொய்யாகவும், தவறாகவும், தகவல் தந்து, 1. 2

பிரதிவாதிகள் பதில் கொடுத்துள்ளார்கள் என்றும் அவ்வாறு 1, 2 பிரதிவாதிகள் கொடுத்த பதிலறிவிப்பில் கண்ட சங்கதிகள் யாவும் உண்மையல்ல என்றும் 1. 2 பிரதிவாதிகள் எழுதிக் கொடுத்த பதிவு எண் 1941 / 2011 கொண்ட 21.04.2011 தேதிய உடன்படிக்கை ஆதரவு வாதிகளையோ பிரிபடாத சொத்தினை அவர்களுடன் கிரயம் பெற்ற நபர்களையோ கட்டுப்படுத்தாது என்றும் அவ்வாதரவும் சட்டப்படி செல்லக் கூடிய ஆதரவல்ல என்றும் அதனால், அந்த ஆதரவினை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியமில்லை என்றும் ஆனால், அவ்வாதரவினை VOID என விளம்புகை செய்ய வேண்டியுள்ளது என்றும் அவ்வாதரவில் கண்ட சொத்தினைத்தான் இந்த தாவாவில் சொத்து விபரத்தில் காட்டப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்,

2.3 மேற்படி செல்லாத ஆதரவினை வைத்து 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜெண்டான கேதர்நாதன், தாவாவில் கண்ட 11 முதல் 25 நபர்களுக்கு. தாவா சொத்தினைக் காட்டி, அதில் பாதை பாத்தியம் காட்டி தாவா சொத்திற்கு மேற்புறம் உள்ள சொத்தினை. சிதம்பரம் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் முறையே பதிவாகியுள்ள பதிவு எண். 5358/2011 (15.09.2011), பதிவு எண்.6478/2011 (14.11.2011), பதிவு எண்.6818/2011 (24.11.2011), பதிவு எண்.6917/2011 (28.11.201), பதிவு எண்.7291/2011 (12.12.2011), பதிவு எண்.7499/2011 (21.12.2011), பதிவு எண்.303/2012 (30.01.2012), பதிவு எண்.1551/2012 (28.03.2012), பதிவு எண்.1552/2012 (28.03.2012), பதிவு எண்.1553/2012 (28.03.2012) பதிவு எண். 1544/2012 (28.03.2012), பதிவு எண்.2951/2012 (13.06.2012) -என 11 முதல் 25 பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுத்துள்ளதும், வாதிகளுக்கு 07.11.2014 ல் தெரிய வந்தது. அவ்வாறு ஏற்பட்ட கிரயங்களில் தாவா சொத்தினைப் பொறுத்து மட்டும் கிரயம் கொடுத்தது செல்லாது அதாவது VOID ஆதரவு என விளம்புகை செய்ய வேண்டியுள்ளது என்றும் அதற்கு 11 முதல் 25 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பும் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால், எவ்வித பதிலும் அனுப்பவில்லை. மேற்படி 12-ம் பிரதிவாதி, மேற்படி பதிவு எண் 6478 / 2011 என்ற ஆதரவில் தனியாகவும், பதிவு எண் 303 / 2012 என்ற ஆதரவில் தனது மகளுடன் சேர்ந்து இரு கிரயம் பெற்றுள்ளார் என்றும் மேற்படி

1.2 பிரதிவாதிகளிடம் ஏற்படுத்தியுள்ள உடன்படிக்கை ஆதரவினையும் 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜெண்ட் என்ற முறையில் 11 முதல் 25 பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுத்த அனைத்து ஆதரவுகளிலும் தாவா சொத்தினைப் பொறுத்து மட்டும். VOID ஆதரவு என விளம்புகை செய்ய வேண்டி இந்த தாவா தொடர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

2.4 மேற்படி ஆதரவுகளை வைத்து, 3 முதல் 25 பிரதிவாதிகள் தாவ சொத்தினை ஆக்கிரமிக்கவேண்டி 25.12.2014 அன்று முயற்சித்ததை வாதிகள் வரவிடாமல் தடுத்துவிட்டார்கள் என்றும் மேற்படி அசல் வழக்கானது நிலுவையில் உள்ள போது 1-ம் பிரதிவாதியானவர் கடந்த 20.02.2024 அன்று இறந்துவிட்டதால் அவரது ஏக வாரிசான அவரது குமாரர் இந்த வழக்கில் முன்னமே 2-ம் பிரதிவாதியாக உள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளார், எனவே தாவா சொத்தினைப் பொறுத்து, 1,2 பிரதிவாதிகளால், 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜெண்ட்டிற்கு எழுதிக் கொடுத்த 21.04.2011 - தேதிய கிரய உடன்படிக்கை செல்லாது (VOID ) என விளம்புகை செய்தும். தாவா சொத்துக்களைப் பொறுத்து மட்டும், 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜெண்ட் 11 முதல் 25 பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுத்த 5358/2011, 6478/2011, 6818/2011, 6817/2011, 7291/2011, 7499/2011, 303/2012. 1551/2012, 1552/2012, 1553/2012, 1544/2012. 2951/2012 ஆகிய ஆவணங்களும் செல்லாது என விளம்புகை செய்து, அதன் தொடர் பரிகாரமாக, தாவா சொத்தில் வாதிகள் அனுபவத்தில், 3 முதல் 25 பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ அல்லது ஏஜெண்டுகளோ எவ்விதத்திலும் இடைஞ்சல் செய்யாதிருக்க வேண்டி. 3 முதல் 25 பிரதிவாதிகளுக்கெதிராக நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் வழங்கவும் மற்றும் இவ்வழக்கின் செலவுத்தொகைக்கும் வாதியால் இந்த வழக்கு முன்னிடப்பட்டுள்ளது.

**<u>3) 2 ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையின் சுருக்கம் :-</u>**

3.1 வாதியின் வழக்கு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும் வாதியினரும், கட்டிடத்தில் உள்ள குடியிருப்பின் மற்ற உரிமையாளர்களும், தாங்கள் வாங்கிய நாளிலிருந்தே வழி உரிமை குறித்து அறிந்திருந்தனர் என்றும் மேலும் அவர்கள் அதற்கு ஒருபோதும் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றும் உண்மையில், அந்த உரிமையைப் பயன்படுத்துவதற்கு அவர்கள் முழுமையாக உடன்பட்டனர் என்பதை அவர்களின் நடத்தையே நிரூபிக்கும் என்றும் உண்மையில், தற்போது சர்ச்சை எழுப்பப்பட்டுள்ள அந்தப் பாதை வழியாகவே, 23-வது பிரதிவாதி, 3 முதல் 10 வரையிலான பிரதிவாதிகளின் மேற்குப் பகுதிச் சொத்திற்கு, லாரிகள் மற்றும் பிற வாகனங்களைக் கொண்டு மணல், செங்கல், சிமெண்ட் போன்ற அனைத்து கட்டுமானப் பொருட்களையும் ஏற்றி இறக்கியும், இடிபாடுகளை அகற்றியும் வந்தார் என்றும் வாதிகள், பிரதிவாதிகள் 1 மற்றும் 2-ஐ ஒருபோதும் சந்திக்கவில்லை என்பதையும், அவர்களால் 2011-ஆம் ஆண்டின் ஆவணம் 1941 நிறைவேற்றப்பட்டது குறித்து அவர்களிடம் கேட்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். வழக்குச் சொத்தின் மீது மேற்கு பகுதியில் உள்ள உரிமையாளர்களுக்கு ஏற்கனவே இருந்த வழி உரிமை இருப்பதையும், அதனை அவர்கள் பயன்படுத்துவதையும் வாதிகள் அறிந்திருக்கிறார்கள் என்றும் அதைப் பற்றிக் கேள்வி எழுப்ப வாதிகளுக்கு உரிமை இல்லை, மேலும் அவர்கள் அந்த வாதத்தை எழுப்புவதிலிருந்து தடுக்கப்பட்டு, தடை செய்யப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.2 31-10-2014 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு, வாதிகளில் சிலரால் மட்டுமே வழங்கப்பட்டது என்றும் முதல் மற்றும் இரண்டாம் பிரதிவாதிகள் அதற்குத் தங்கள் பதிலை அனுப்பியுள்ளனர் என்றும் முதல் மற்றும் இரண்டாம்

பிரதிவாதிகளுக்கு, அவர்களால் குறிப்பிடப்பட்ட O.S. 68/2014 என்ற வழக்கு அல்லது இடைக்கால மனு பற்றித் தெரியாது என்றும் அவர்கள் அந்த வழக்கில் தரப்பினராக இருக்கவில்லை என்றும் பிராதில் விவரிக்கப்பட்டுள்ள பல்வேறு விற்பனைப் பத்திரங்கள் குறித்தும் அவர்களுக்குத் தெரியாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.3 நீதிமன்றக் கட்டணம் மற்றும் அதிகார வரம்பு நோக்கங்களுக்காக இந்த வழக்கு முறையாக மதிப்பிடப்படவில்லை என்றும்  மனுவில் கோரப்பட்டுள்ள கோரிக்கை மூன்று தனித்தனி நிவாரணங்களைக் கோருகிறது என்றும் ஒரு கோரிக்கை, 21-04-2011 தேதியிட்ட பத்திரம் [ஆவணம் 1941/2011] குறித்த ஒரு பிரகடனத்துடன் தொடர்புடையது, இரண்டாவது கோரிக்கை, 11 முதல் 25 வரையிலான பிரதிவாதிகளுக்குச் சொந்தமானவை எனக் கூறப்படும் ஆவணங்கள் குறித்த ஒரு பிரகடன நிவாரணத்துடன் தொடர்புடையது, மூன்றாவது கோரிக்கை, நிரந்தர உறுத்துக்கட்டளை நிவாரணம் என்றும் இந்த வழக்கு, வெவ்வேறு உரிமையாளர்கள் மற்றும் பிரதிவாதிகளால் சொந்தமாகக் கொள்ளப்பட்டு, உடைமையில் உள்ள பல்வேறு அசையாச் சொத்துக்கள் தொடர்பான நிவாரணங்கள் சம்பந்தப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

3.4 வாதிகளின் கூற்றுப்படி, அந்த ஆவணங்கள் சந்தை மதிப்புள்ள ஒரு அசையாச் சொத்தின் மீது உரிமையை உருவாக்குவதாகவும்,  பிராதை திறம்பட சங்கத்தில் கொண்டு தாக்கல் செய்வதால் உரிய நீதிமன்றக் கட்டணத்தைச் செலுத்துவதைத் தவிர்க்கவோ அல்லது ஏமாற்றவோ முடியாது என்றும் நீதிமன்றக் கட்டணச் சட்டத்தின் பிரிவு 25[d]-இன் கீழ் இந்த வழக்கை மதிப்பிட முடியாது என்றும் வாதிகளால் ஒப்புக்கொள்ளப்பட்டபடி, இந்த வழக்கில் முரண்பாட்டுக்குரிய ஆவணங்கள், அவர்களின் உரிமையைப் பாதிக்கும்

பட்சத்தில், அவர்கள் அந்த ஆவணத்தைத் தள்ளுபடி செய்யவும் ரத்து செய்யக் கோரவும், மேலும் வழக்கை அதன் சந்தை மதிப்பின் அடிப்படையில் மதிப்பிட்டு நீதிமன்றக் கட்டணத்தைச் செலுத்தவும் கடமைப்பட்டுள்ளதாகவும் மேலும், பிரதிவாதிகள் ஒவ்வொருவரும் தனித்தனி விற்பனைப் பத்திரங்களின் கீழ் தனித்தனியான உரிமையைக் கோருவதாகவும் எனவே, அவர்களுக்கு எதிராகக் கோரப்பட்ட நிவாரணங்களுக்காக, ஒவ்வொரு பிரதிவாதிக்கும் எதிராகத் தனித்தனியாக நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என்றும் இந்த வழக்கில் எந்த விற்பனை ஒப்பந்தமும் சம்பந்தப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

3.5 முறையான மதிப்பீட்டின் அடிப்படையில் இந்த வழக்கானது இந்த நீதிமன்றத்தின் பண அதிகார வரம்பை மீறுவதாகவும் நீதிமன்றக் கட்டணம் மற்றும் அதிகார வரம்பு தொடர்பான மதிப்பீட்டுக் கேள்வியை ஒரு முதல்நிலை எழுவினாவாக தீர்க்க வேண்டும் என்றும் காலவரையறைச் சட்டத்தால் இந்த வழக்கு தடை செய்யப்பட்டுள்ளது என்றும் இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் ஏதுமில்லை என்றும் கூறப்படும் வழக்கு மூலம் பொய்யானது என்றும் எனவே, வாதியின் இந்த வழக்கினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

4) வாதியின் வழக்குரை, பிரதிவாதியின் எதிர்வழக்குரை ஆகியவற்றின் அடிப்படையில் இவ்வழக்கின் தீர்விற்காக 3.9.2023 அன்று கீழ்க்கண்ட எழுவினாக்கள் இந்நீதிமன்றத்தால் வனையப்பட்டுள்ளன :-

1. Whether the 3 to 10 defendants have pre existing right of way over the suit property.

2. Whether the sale agreement vide Doc.No.1941/2011 executed by 1st and 2nd

defendant in favour of 23rd defendant call be declared as null and void.

3. Whether the sale deeds executed by 23rd defendant to and in favour, of 11 to 25 defendants can be declared as null and void.

4. Whether the plaintiff's are entitled for the relief of permanent injunction restraining the 3 to 25 defendants from interfering with the peaceful possession of plaintiff.

5. Whether the suit is bad for non joinder of necessary parties.

6. Whether the suit has been property valued and correct courts fees is paid.

7. To what other relief or order.

5) வாதி தரப்பில் வாதி முகம்மது இசாக் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.26 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் வா.சா.1 குறுக்கு விசாரணையில் பி.வா.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**<u>6) எழுவினாக்கள் எண்.1 முதல் 4 ற்கான தீர்வு:-</u>**

இரு தரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்களை பரிசிலித்ததில் அசல் வழக்கானது , தாவா சொத்தினைப் பொறுத்து, 1,2 பிரதிவாதிகளால், 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜெண்ட்டிற்கு எழுதிக் கொடுத்த 21.04.2011 - தேதிய கிரய உடன்படிக்கை செல்லாது (VOID) என விளம்புகை செய்தும். தாவா சொத்துக்களைப் பொறுத்து மட்டும், 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜெண்ட் 11 முதல் 25 பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுத்த 5358/2011, 6478/2011, 6818/2011, 6817/2011, 7291/2011, 7499/2011, 303/2012. 1551/2012, 1552/2012, 1553/2012, 1544/2012. 2951/2012 ஆகிய ஆவணங்களும் செல்லாது (VOID) என விளம்புகை செய்து, அதன் தொடர் பரிகாரமாக, தாவா சொத்தில் வாதிகள் அனுபவத்தில், 3 முதல் 25

பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ அல்லது ஏஜெண்டுகளோ எவ்விதத்திலும் இடைஞ்சல் செய்யாதிருக்க வேண்டி. 3 முதல் 25 பிரதிவாதிகளுக்கெதிராக நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் வழங்கவும் மற்றும் இவ்வழக்கின் செலவுத்தொகைக்கும் வாதியால் இந்த வழக்கு முன்னிடப்பட்டுள்ளது.

7) வழக்கு சொத்து வாதிகளுக்கும். 1, 2 பிரதிவாதிகளுக்கும், மற்றும் வேறு 22 நபர்களுக்கும் பொதுவில், பிரியாமல், பாத்தியப்பட்ட சொத்து என்றும் தாவாவில் கண்ட சொத்தும், அதன் கீழ்புறம் மற்றும் தென்புற சொத்தும், ஆக 27,050 சதுரடி சொத்து ஆதியில், 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும் தாவா சொத்தும், அதன் கீழ்புறம் மற்றும் தென்புற சொத்தினை, வாதிகள் உள்பட மேலும் 22 நபர்களுக்கும், 1. 2 பிரதிவாதிகளுக்கும் சேர்த்து, வீடு கட்டுவதற்கு பிரிபடாத மனைகளாக கிரயம் கொடுத்ததாகவும் அதனடிப்படையில், பிரிபடாத மனைகளில் வீடு கட்டுவதற்காக தாவாவில் கண்ட 3 முதல் 10 நபர்களின் பவர் ஏஜெண்டும் தாவாவில் கண்ட 23 -ம் பிரதிவாதியுமான கேதர்நாதன் என்பவரிடம், கட்டிடம் கட்ட வாதிகளும், 1, 2 பிரதிவாதிகளின் இதர பிரிபடாத மனைகளை கிரயம் பெற்ற நபர்களும் 27,050 சதுரடியினை கட்டிடம் கட்ட ஒப்படைக்கப்பட்டதாகவும் கேதார்நாதன் 27,050 சதுர அடியில் FLAT கட்டி வாதிகளிடமும், 1, 2 பிரதிவாதிகளிடமும் முழுமையாக பணி நிறைவேறாத நிலையில் ஒப்படைத்துள்ளதாகவும், வாதிகள் கிரயம் பெற்றுள்ள பிரிபடாத சொத்துக்களான 27.050 சதுரடியில், மேற்புறம், தென்புறத்தில் கீழ்மேல் ஜாதியடி 10. தென்வடல் 193 ஜாதியடி காலி மனையினைப் பொறுத்து, 1, 2 பிரதிவாதிகள், தாவாவில் 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜெண்டான கேதர்நாதனுக்கு 15.09.2011 ல் வழிநடை உரிமை கொடுத்து, ஒரு உடன்படிக்கை ஏற்படுத்தியுள்ளதாகவும் 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜெண்ட் வாதிகளில் 1, 3, 4 நபர்கள் பேரிலும், மேலும் சில நபர்கள் பேரிலும், சிதம்பரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S 68/2014 ன் கீழ் வழக்கு தொடர்ந்து, அதில் இடைக்கால மனு கொடுத்து. அதுவும் I.A. 257/2014 ல் கீழ் இடைக்கால

புழங்குரிமை பாத்தியம் கோரி மனு கொடுத்து. அதில் அறிவிப்பு வந்த போது தான் வாதிகளுக்கு தெரிய வந்தததாகவும் அதனடிப்படையில், வாதிகள், 1, 2 பிரதிவாதிகளை நேரில் சந்தித்து, மேற்படி வழிநடை ஒப்பந்தத்தைப் பற்றி கேட்ட போது, எவ்வித பதிலும் கூறாமல் இருந்ததால், அந்த வழக்கில் கட்சி தாக்கல் செய்து மேற்படி இடைக்கால மனுவினை தள்ளுபடி செய்யப்பட்டு விட்ட பிறகு, வாதிகளுக்கு மேற்படி 1. 2 பிரதிவாதிகள் மேற்படி பிரிபடாத சொத்தினை விற்ற பிறகு, தங்களுக்கென எவ்வித தனிப்பட்ட முறையில் எவ்வித உரிமையும் இல்லாத சொத்தினைப் பொறுத்து 1, 2 பிரதிவாதிகள், வழிநடை ஒப்பந்தம் எழுதிக் கொடுக்க உரிமையில்லை என்றும் அவ்வாறு எழுதிக் கொடுத்தது செல்லாது எனக் கூறி வழக்கறிஞர் மூலம் அந்த 31.10.2014 ல் அறிவிப்பு அனுப்பியதற்கு 1. 2 பிரதிவாதிகள் எழுதிக் கொடுத்த பதிவு எண் 1941 / 2011 கொண்ட 21.04.2011 தேதிய உடன்படிக்கையானது வாதிகளோ பிரிபடாத சொத்தினை அவர்களுடன் கிரயம் பெற்ற நபர்களையோ கட்டுப்படுத்தாது என்றும் மேற்படி செல்லாத ஆதரவினை வைத்து 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜெண்டான கேதர்நாதன், தாவாவில் கண்ட 11 முதல் 25 நபர்களுக்கு. தாவா சொத்தினைக் காட்டி, அதில் பாதை பாத்தியம் காட்டி தாவா சொத்திற்கு மேற்புறம் உள்ள சொத்தினை, சிதம்பரம் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் முறையே பதிவாகியுள்ள பதிவு எண். 5358/2011 (15.09.2011), பதிவு எண்.6478/2011 (14.11.2011), பதிவு எண்.6818/2011 (24.11.2011), பதிவு எண்.6917/2011 (28.11.201), பதிவு எண்.7291/2011 (12.12.2011), பதிவு எண்.7499/2011 (21.12.2011), பதிவு எண்.303/2012 (30.01.2012), பதிவு எண்.1551/2012 (28.03.2012), பதிவு எண்.1552/2012 (28.03.2012), பதிவு எண்.1553/2012 (28.03.2012) பதிவு எண். 1544/2012 (28.03.2012), பதிவு எண்.2951/2012 (13.06.2012) - என 11 முதல் 25 பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுத்துள்ளதும், வாதிகளுக்கு 07.11.2014 ல் தெரிய வந்தது என்றும் அவ்வாறு ஏற்பட்ட கிரயங்களில் தாவா சொத்தினைப் பொறுத்து மட்டும் கிரயம் கொடுத்தது செல்லாது என விளம்புகை செய்ய வேண்டியுள்ளது என்றும் 12-ம் பிரதிவாதி. மேற்படி பதிவு எண் 6478/2011 ல் தனியாகவும், பதிவு எண் 303/2012 ல் தனது மகளுடன் சேர்ந்து இரு கிரயம் பெற்றுள்ளதாகவும் மேற்படி 1.2 பிரதிவாதிகளிடம் ஏற்படுத்தியுள்ள

உடன்படிக்கை மூலம் 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜெண்ட் என்ற முறையில் 11 முதல் 25 பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுத்த அனைத்து ஆதரவுகளிலும் தாவா சொத்தினைப் பொறுத்து மட்டும் செல்லாது என விளம்புகை செய்ய இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது.

8) பிரதிவாதி தரப்பிலோ வாதியினரும், கட்டிடத்தில் உள்ள குடியிருப்பின் மற்ற உரிமையாளர்களும், தாங்கள் வாங்கிய நாளிலிருந்தே வழி உரிமை குறித்து அறிந்ததால் அதற்கு ஒருபோதும் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றும் அந்தப் பாதை வழியாகவே, 23-வது பிரதிவாதி, 3 முதல் 10 வரையிலான பிரதிவாதிகளின் மேற்குப் பகுதிச் சொத்திற்கு, லாரிகள் மற்றும் பிற வாகனங்களைக் கொண்டு மணல், செங்கல், சிமெண்ட் போன்ற அனைத்து கட்டுமானப் பொருட்களையும் ஏற்றி இறக்கியும், இடிபாடுகளை அகற்றியும் வந்தார் என்றும் வழக்குச் சொத்தின் மீது மேற்கு பகுதியில் உள்ள உரிமையாளர்களுக்கு ஏற்கனவே இருந்த வழி உரிமை இருப்பதையும், அதனை அவர்கள் பயன்படுத்துவதையும் வாதிகள் அறிந்திருக்கிறார்கள் என்றும் முதல் மற்றும் இரண்டாம் பிரதிவாதிகளுக்கு, O.S. 68/2014 என்ற வழக்கு அல்லது இடைக்கால மனு பற்றித் தெரியாது என்றும் அவர்கள் அந்த வழக்கில் தரப்பினராக இருக்கவில்லை என்றும் பிராதில் விவரிக்கப்பட்டுள்ள பல்வேறு விற்பனைப் பத்திரங்கள் குறித்தும் அவர்களுக்குத் தெரியாது என்றும் நீதிமன்றக் கட்டணம் மற்றும் அதிகார வரம்பு நோக்கங்களுக்காக இந்த வழக்கு முறையாக மதிப்பிடப்படவில்லை என்றும் வழக்கில் கோரியுள்ள பரிகாரங்களில் 21-04-2011 தேதியிட்ட பத்திரம் செல்லாது என்றும், 11 முதல் 25 வரையிலான பிரதிவாதிகளுக்குச் சொந்தமானவை எனக் கூறப்படும் ஆவணங்களும் செல்லாது என விளம்புகை செய்யவும், நிரந்தர உறுத்துக்கட்டளை என்றும் இந்த வழக்கு, வெவ்வேறு உரிமையாளர்கள் மற்றும் பிரதிவாதிகளால் சொந்தமாகக் கொள்ளப்பட்டு, உடைமையில் உள்ள பல்வேறு அசையாச் சொத்துக்கள் தொடர்பான பரிகாரங்கள் சம்பந்தப்பட்டது என்றும் நீதிமன்றக்

கட்டணச் சட்டத்தின் பிரிவு 25[d]-இன் கீழ் இந்த வழக்கை மதிப்பிட முடியாது என்றும் முறையான மதிப்பீட்டின் அடிப்படையில் இந்த வழக்ககானது இந்த நீதிமன்றத்தின் பண அதிகார வரம்பை மீறுவதாகவும் நீதிமன்றக் கட்டணம் மற்றும் அதிகார வரம்பு தொடர்பான மதிப்பீட்டுக் கேள்வியை ஒரு முதல்நிலை எழுவினாவாக தீர்க்க வேண்டும் என்றும் காலவரையறைச் சட்டத்தால் இந்த வழக்கு தடை செய்யப்பட்டுள்ளது என்றும் இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் ஏதுமில்லை என்றும் பிரதிவாதி தரப்பில் வாதிடப்பட்டது.

9) வாதிகள் தரப்பில் 4 ம் வாதி அறிவழகன் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, பிராது சங்கதிகளை ஒத்துரைத்து அவர் தனது பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.26 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1ம் வாதி கிரயம் பெற்ற 09.07.2009 தேதியிட்ட பத்திரம் வா.சா.ஆ.1 ஆகவும், முருகேசன் வகையறாவிற்கு கொடுத்த பத்திரம் வா.சா.ஆ.2 ஆகவும், 2-ம் வாதி பெற்ற கிரய பத்திரம் வா.சா.ஆ.3 ஆகவும், 3-ம் வாதி பெற்ற கிரய பத்திரம் வா.சா.ஆ.4 ஆகவும், 4-ம் வாதி பெற்ற கிரய பத்திரம் வா.சா.ஆ.5 ஆகவும், 5-ம் வாதி பெற்ற கிரய பத்திரம் வா.சா.ஆ.6 ஆகவும், 6-ம் வாதி பெற்ற கிரய பத்தி ரம் வா.சா.ஆ.7 ஆகவும், 7-ம் வாதி பெற்ற கிரய பத்திரம் வா.சா.ஆ.8 ஆகவும், 8-ம் வாதி பெற்ற கிரய பத்திரம் வா.சா.ஆ.9 ஆகவும், வாதிகள் 1.2 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய நோட்டீஸ் வா.சா.ஆ.10 ஆகவும், 1,2 பிரதிவாதிகள் அனுப்பிய பதிலறிவிப்பு வா.சா.ஆ.11 ஆகவும், 1.2 பிரதிவாதிகளுக்கு 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜண்டிற்கும் ஏற்பட்ட உடன்படிக்கை வா.சா.ஆ.12 ஆகவும், 11ம் பிரதிவாதிக்கு 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜண்ட் எழுதி கொடுத்த கிரயம் வா.சா.ஆ.13 ஆகவும், 12,13 பிரதிவாதிகளுக்கு 3 முதல் 10 பிரதிவாதிகள் பவர் ஏஜென்ட் எழுதிக் கொடுத்த கிரய பத்திரம் வா.சா.ஆ.14 ஆகவும், 14 ம் பிரதிவாதிக்கு 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜென்ட் எழுதி கொடுத்த கிரைய பத்திரம் வா.சா.ஆ.15 ஆகவும், 15 ம் பிரதிவாதிக்கு 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜென்ட் எழுதி கொடுத்த கிரய பத்திரம் வா.சா.ஆ.16 ஆகவும், 16 ம் பிரதிவாதிக்கு 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜென்ட் எழுதிக்

கொடுத்த கிரய பத்திரம் வா.சா.ஆ.17 ஆகவும், 17ம் பிரதிவாதிக்கு 3 முதல் 10 கொடுத்த கிரய பத்திரம் பிரதிவாதிகளின் பவர் ஏஜண்ட் எழுதி கொடுத்த கிரைய பத்திரம் வா.சா.ஆ.18 ஆகவும், 18ம் பிரதிவாதிக்கு 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜென்ட் எழுதிக் கொடுத்த கிரய பத்திரம் வா.சா.ஆ.19 ஆகவும், 19ம் பிரதிவாதிக்கு 3 முதல் 10 கொடுத்த கிரய பத்திரம் பிரதிவாதிகளின் பவர் ஏஜென்ட் எழுதி கொடுத்த கிரய பத்திரம் வா.சா.ஆ.20 ஆகவும், 20ம் பிரதிவாதிக்கு 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜென்ட் எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரம் வா.சா.ஆ.21 ஆகவும், வாதிகள் தரப்பில் 11 முதல் 25 பிரதிவாதிகளுக்கு கொடுத்த நோட்டீஸ் வா.சா.ஆ.22 ஆகவும், 21ம் பிரதிவாதிக்கு 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜென்ட் எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரம் வா.சா.ஆ.23 ஆகவும், 22 முதல் 24 பிரதிவாதிகளுக்கு 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜென்ட் எழுதிக் கொடுத்த கிரய பத்திரம் வா.சா.ஆ.24 ஆகவும், 25ம் பிரதிவாதிக்கு 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜென்ட் எழுதி கொடுத்த கிரய பத்திரம் வா.சா.ஆ.25 ஆகவும், பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட விற்கிரய பத்திரம் வா.சா.ஆ.26 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.1 ன் குறுக்கு விசாரணையில் ஒத்திசைவு குறிப்பின் நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10) இந்த வழக்கு இந்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் தரப்பினர்களுக்குள் வழக்கு பிரச்சினை குறித்து ஒரு ஒத்திசைவு உடன்படிக்கை ஏற்பட்டுள்ளதாகவும் அதன்படி இவ்வழக்கில் தீர்ப்பு வழங்க அனுமதி கோரி இருதரப்பினரும் சேர்ந்து தாக்கல் செய்த ஒத்திசைவு உடன்படிக்கையானது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பி.வா.சா.ஆ.1 ஐ பரிசீலனை செய்கையில்……

> *"இந்த வழக்கு 3 முதல் 10 பிரதிவாதிகளுக்க உரிமை உள்ள இடத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு செல்வதற்கு 3 முதல் 10 பிரதிவாதிகள் அனைவருக்கும் சொந்தமான இடத்திலேயே தனிவழி ஏற்பாடு செய்து கொண்டு விட்டார்கள். மேலும் 1,2*

*பிரதிவாதிகள் இடத்திலிருந்து மேல்புரம் சந்தில் புதியதாக சுவர் எழுப்பி வழிபாதை அமைக்கப்பட்டுவிட்டது. ஆகவே 1,2 பிரதிவாதிகள் தங்களுடைய எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள கட்சிகளை அவர்கள் வலியுறுத்தவில்லை. மேலும் வழக்கு சொத்தினை பொறுத்து 1,2 பிரதிவாதிகளுக்குள்ள இதர கட்சிகளுக்கும் உரிமைகளுக்கும் விரோதமின்றி தாவா சொத்தை பொறுத்து 1. 2 பிரதிவாதிகளால் 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜெண்டுக்கு எழுதி கொடுக்கப்பட்ட 21.4.2011 தேதிய கிரய உடன்படிக்கை பொய்யானது (void) என விளம்புகை செய்வதில் 1,2 பிரதிவாதிகளுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை, எனவே சில வன்னியில் தீர்ப்பு செய்ய வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகள் சம்மதிக்கிறார்கள்."*

11) மேற்படி ஒத்திசைவு உடன்படிக்கையானது ஏற்கத்தக்க ஒன்று என்றும் சட்டத்திற்கு உட்பட்ட ஒன்று என்றும் எனவே அதனை ஏற்று அதன் அடிப்படையில் இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கலாம் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. எனவே, தாவா சொத்தை பொறுத்து 1,2 பிரதிவாதிகளுக்கும் 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜெண்டான வழக்கின் 23 ம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட (ஆவண எண். 1941/2011) 21.4.2011 தேதியிட்ட உடன்படிக்கையானது செல்லத் தக்கதல்ல என விளம்புகை செய்யப்படுகிறது மற்றும் 23 ம் பிரதிவாதி, 11 முதல் 25 வரையிலான பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுத்த வா.சா.ஆ.13 முதல் வா.சா.ஆ.21 மற்றும் வா.சா.ஆ.23 முதல் வா.சா.ஆ.25 ஆக குறியீடு செய்யப்பட்ட கிரய பத்திரங்களில் கண்டுள்ள B- இன சொத்தான தாவா சொத்தை பொறுத்து மட்டும் செல்லாது என விளம்புகை செய்யப்படுகிறது. அதன் தொடர் பரிகாரமாக வாதிகளின் அனுபவத்தில் உள்ள தாவா சொத்தை பொறுத்து 3 முதல் 7, 9, 11 முதல் 25 வரையான பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ அல்லது முகவர்களோ இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரமானது வழங்கப்படுகிறது. மேற்கண்ட

பரிசீலனையிலிருந்து, பி.வா.சா.ஆ.1 ற்கிணங்க எழுவினாக்கள் 1 முதல் 4 ற்கு தீர்வு காணப்படுகிறது.

12) **எழுவினாக்கள் எண்.5 ,6 ற்கான தீர்வு:-**

வழக்கின் தரப்பினர்களுக்கிடையே ஒத்திசைவு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு, பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டதை கருத்தில்கொண்டும், பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரையில் நீதிமன்ற கட்டணத்தை குறித்த சங்கதிகள் இருந்தாலும், அதற்குரிய சாட்சியங்களை முன்னிலைப்படுத்தாத காரணத்தினாலும், வழக்கு கோப்புகளை ஆராய்ந்து பார்க்கையில், வழக்கின் பிரதான பரிகாரத்திற்கான நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்ட நிலையில் துணைப் பரிகாரத்திற்கான கட்டணங்களை விதிப்பது அவசியமற்றதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகையால் வாதிக்கு ஆதரவாக எழுவினாக்கள் 5 மற்றும் 6 ற்கு தீர்வு காணப்படுகிறது.

13) **எழுவினா 7-ற்கான தீர்வு :**

மேற்கண்ட எழுவினாக்கள் 1 முதல் 6 ற்கு வாதி கோரிய பரிகாரங்கள் வாதிக்கு வழங்கப்பட்ட பின்னர் வேறு எந்த இதர பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என எழுவினா 7 ற்கு தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக, அசல் வழக்கு கீழ்கண்டவாறு அனுமதிக்கப்படுகிறது.

1. தாவா சொத்தை பொறுத்து 1,2 பிரதிவாதிகளுக்கும் 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜெண்டான வழக்கின் 23 ம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட (ஆவண எண். 1941/2011) 21.4.2011 தேதியிட்ட உடன்படிக்கையானது செல்லத் தக்கதல்ல என விளம்புகை செய்யப்படுகிறது.

2. 23 ம் பிரதிவாதி, 11 முதல் 25 வரையிலான பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுத்த வா.சா.ஆ.13 முதல் வா.சா.ஆ.21 மற்றும் வா.சா.ஆ.23 முதல் வா.சா.ஆ.25 ஆக குறியீடு செய்யப்பட்ட கிரய பத்திரங்களில் கண்டுள்ள B- இன சொத்தான தாவா

சொத்தை பொறுத்து மட்டும் செல்லாது என விளம்புகை செய்யப்படுகிறது. அதன் தொடர் பரிகாரமாக வாதிகளின் அனுபவத்தில் உள்ள தாவா சொத்தை பொறுத்து 3 முதல் 7, 9, 11 முதல் 25 வரையான பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ அல்லது முகவர்களோ இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரமானது வழங்கி உத்தரவிடப்படுகிறது.

3. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.1 ஆன ஒத்திசைவு குறிப்பு இந்த தீர்ப்புரையின் ஒரு அங்கமாக பாவிக்கப்படுகிறது.

4. வழக்கின் தன்மையை கருத்தில்கொண்டு அவரவர் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்க வேண்டும் என தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பின்னர் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26-ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/- E.Swetha)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்

<u>**வாதி தரப்பு சாட்சிகள்**</u>:

வா.சா.1 அறிவழகன் (4 ம் வாதி)

<u>**வாதி தரப்பு சான்றாவணங்கள்:**</u>

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 09.07.2009 | 1 ம் வாதி கிரயம் பெற்ற பத்திரம் -சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 14.10.2010 | முருகேசன் வகையறாவிற்கு கொடுத்த பத்திரம்-சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 15.04.2011 | 2-ம் வாதி பெற்ற கிரய பத்திரம் -சான்றிட்ட நகல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.4 | 02.12.2009 | 3-ம் வாதி பெற்ற கிரய பத்திரம் -சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.5 | 02.12.2009 | 4 ம் வாகி பெற்ற கிரய பக்திரம் -சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.6 | 07.06.2010 | 5-ம் வாதி பெற்ற கிரய பத்திரம் -சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.7 | 24.10.2011 | 6-ம் வாதி பெற்ற கிரய பத்திரம் -சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.8 | 25.07.2011 | 7-ம் வாதி பெற்ற கிரய பத்திரம் -சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.9 | 09.07.2009 | 8-ம் வாதி பெற்ற கிரய பத்திரம்- சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.10 | 31.10.2014 | வாதிகள் 1.2 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய நோட்டீஸ்- அலுவலக நகல் |
| வா.சா.ஆ.11 | 04.12.2014 | 1,2 பிரதிவாதிகள் அனுப்பிய பதிலறிவிப்பு- சார்பு நகல் |
| வா.சா.ஆ.12 | 21.04.2011 | 1.2 பிரதிவாதிகளுக்கும் 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜண்டிற்கும் ஏற்பட்ட உடன்படிக்கை -சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.13 | 15.09.2011 | 11 ம் பிரதிவாதிக்கு 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜண்ட் எழுதி கொடுத்த கிரயம் -சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.14 | 14.11.2011 | 12,13 பிரதிவாதிகளுக்கு 3 முதல் 10 பிரதிவாதிகள் பவர் ஏஜென்ட் எழுதிக் கொடுத்த கிரய பத்திரம்- சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.15 | 24.11.2011 | 14 ம் பிரதிவாதிக்கு 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜென்ட் எழுதி கொடுத்த கிரைய பத்திரம் - சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.16 | 28.11.2011 | 15 ம் பிரதிவாதிக்கு 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜென்ட் எழுதி கொடுத்த கிரய பத்திரம் -சான்றிட்ட நகல். |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.17 | 12.12.2011 | 16 ம் பிரதிவாதிக்கு 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜென்ட் எழுதிக் கொடுத்த கிரய பத்திரம் -சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.18 | 21.12.2011 | 17 ம் பிரதிவாதிக்கு 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜண்ட் எழுதி கொடுத்த கிரைய பத்திரம் -சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.19 | 30.01.2012 | 18 ம் பிரதிவாதிக்கு 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜென்ட் எழுதிக் கொடுத்த கிரய பத்திரம் -சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.20 | 28.03.2012 | 19 ம் பிரதிவாதிக்கு 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜென்ட் எழுதி கொடுத்த கிரய பத்திரம் -சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.21 | 28.03.2012 | 20 ம் பிரதிவாதிக்கு 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜென்ட் எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரம் -சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.22 | 23.08.2014 | வாதிகள் தரப்பில் 11 முதல் 25 பிரதிவாதிகளுக்கு கொடுத்த நோட்டீஸ் -சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.23 | 28.03.2012 | 21 ம் பிரதிவாதிக்கு 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜென்ட் எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரம் -சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.24 | 28.03.2012 | 22 முதல் 24 பிரதிவாதிகளுக்கு 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜென்ட் எழுதிக் கொடுத்த கிரய பத்திரம் -சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.25 | 13.06.2012 | 25 ம் பிரதிவாதிக்கு 3 முதல் 10 பிரதிவாதிகளின் பவர் ஏஜென்ட் எழுதி கொடுத்த கிரய பத்திரம் -சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.26 | 13.11.2015 | பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட விற்கிரய பத்திரம்-சான்றிட்ட நகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u>** : இல்லை

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>** : இல்லை

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | | ஒத்திசைவு குறிப்பு- நகல் |

**<u>நீதிமன்ற தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை

(Sd/- E.Swetha)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்